நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No.324/2025**

**P.W. 5 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகாலிங்கம் |
| தந்தை / கணவர் பெயர் | : | குள்ளப்பன் |
| கிராமம் | : | கொளத்தூர் அஞ்சல் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW5** |
| வயது | : | 55 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.45PM

1. நான் தற்போது கொளத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 12.11.2021 ம் தேதி காலை 08. 30 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் ஏகாம்பரம் மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சந்திரகுமார் மற்றும் நானும், தலைமை காவலர் 789 மதன சேகர், PC 2154 ஆகியோர்களுடன் மேட்டூர் எம்ஜிஆர் பாலம் அருகே குற்ற செயல் தடுப்பு சம்மந்தமாக பணியில் இருந்தோம்.

2. அப்போது டியோ மற்றும் ஸ்பிளண்டர் இருச்சக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் வந்தார்கள். அப்போது 4 சக்கர வாகனம் அவர்கள் அருகே வந்து நின்று இரண்டு மூட்டைகளை தூக்கி போட்டார்கள். வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநர் சீக்கிரம் எடுத்துக்கொண்டு செல்லுங்கடா என்று சொன்னார். எங்களுக்கு சந்தேகம் வந்து அருகில் செல்வதற்குள் 4 சக்கர வாகனத்தில்வந்தவர்கள் சென்றுவிட்டார்கள். இரண்டு இருச்சக்கர வாகனத்தில் வந்தவர்களை மட்டும் பிடித்து விசாரித்தோம். அவர்களை விசாரிக்க சிவக்குமார் மற்றும் ராஜேஷ்கண்ணா என்று சொன்னார்கள்.

3. அங்கிருந்த இரண்டு மூட்டைகளை பிரித்து பார்த்தபோது தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட ஹான்ஸ் மற்றும் புகையிலை பொருட்கள் இருந்தது. எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்று கேட்டதற்கு பெங்களூரில் இருந்து எடுத்துவரப்பட்டது என்று சொன்னார்கள். பொருட்களை கைப்பற்றியதில் நாங்கள் உதவியாக இருந்தோம்.

4. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மற்றொரு கைப்பற்றுதல் மகசரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதுசம்மந்தமாக என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார். ஆஜர் எதிரிகளிடம் இருந்துதான் மூட்டை கைப்பற்றப்பட்டு வழக்கு பதிவுசெய்யப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவயிடத்திற்கு இருச்சக்கர வாகனத்தில் சென்றோம். நாங்கள் எம்ஜிஆர் பாலத்தில் நின்றுக்கொண்டிருந்தோம். மேற்படி 4 சக்கர வாகனம் 4 ரோடு நோக்கிச்சென்றது. 4 ரோட்டில் வேகத்தடை மற்றும் வேகத்தடுப்பு வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் ஏகாம்பரம் 4 சக்கரவாகனத்தை துரத்தி சென்றார். அந்த வண்டியை பிடிக்க முடியவில்லை.

2. இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர்களையும், கைப்பற்றப்பட்ட பொருட்களையும் எடுத்துக்கொண்டு காவல் நிலையம் சென்றுவிட்டோம். சம்பவயிடத்தில் சுமார் 15 நிமிடம் இருந்திருப்போம். காவல் நிலையம் செல்லும்போது காலை 09.00 மணியிருக்கும். முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த பின்னிட்டு எதிரிகளை என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது.

3. சிவக்குமாரை தவிர மற்றொரு எதிரியை சம்பவத்திற்கு முன்னால் எனக்கு தெரியாது. சிவக்குமார் மேட்டூர் கார் ஸ்டேண்டில் கார் வாடகைக்கு வைத்து ஓட்டி வருகிறார். வழக்கமாக எதிரிகளை சிறைக்கு அழைத்துச்செல்ல எதிரி சிவக்குமாரின் காரைத்தான் பயன்படுத்தோம் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

4. கைப்பற்றப்பட்ட பொருட்கள் எவ்வளவு, என்னென்ன பொருட்கள் கைப்பற்றினார்கள் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த மகசரில் என்னென்ன பொருட்கள் கைப்பற்றப்ட்டது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். இரண்டு கைப்பற்றுதல் மகசரிலும் தடைசெய்யப்பட்ட ஹான்ஸ் பாக்கெட்டுகள்தான் கைப்பற்றப்பட்டது.

5. கைப்பற்றுதல் மகசரை தவிரவேறு எந்த ஆவணங்களிலும் நான் கையெழுத்து செய்யவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் காருக்கு வாடகை பாக்கி கேட்டதற்காக எதிரிகளின் மீது பொய்யான வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 04.05PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No.324/2025**

**P.W. 6 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | உமாசெல்வம் |
| தந்தை / கணவர் பெயர் | : | சுப்ரமணி |
| கிராமம் | : | வனவாசி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW6** |
| வயது | : | 38 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.06 PM

1. நான் தற்போது எடப்பாடி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 12.11.2021 ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் ஏகாம்பரம், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சந்திரகுமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மகாலிங்கம், தலைமை காவலர் 789 மதனசேகர் ஆகியோருடன் நான் குற்ற

தடுப்பு செயலுக்காக சேலம் டு மேட்டூர் செல்லும் சாலையில் உள்ள எம்ஜிஆர் பாலம் அருகே தணிக்கை செய்துக்கொண்டிருந்தோம்.

2. அங்கே டியோ மற்றும் ஸ்பிளண்டர் பிளஸ் இருச்சக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் நின்றுக்கொண்டிருந்தார்கள். அப்போது மினி டெம்போ ஒன்று அவர்கள் அருகில் வந்து நிறுத்தினார்கள், அதிலிருந்து ஒருவர் சீக்கிரம் மூட்டையை இறக்குங்கள் என்று சொன்னார்.

3. இரண்டு மூட்டையை இறக்கி போட்டார்கள். நாங்கள் பார்த்து அருகில் செல்லும்போது டெம்போவை எடுத்து சென்றுவிட்டார்கள். இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர்களை மட்டும் பிடித்தோம். அவர்களை விசாரிக்க ஒருவர் பெயர் சிவக்குமார் என்றும், மற்றொருவர் பெயர் ராஜேஷ்கண்ணா என்றும் சொன்னார்கள். இருவரும் காவேரி நகரை சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள்.

4. மூட்டையை பிரித்து பார்க்க ஹான்ஸ் மற்றும் புகையிலை பொருட்கள் இருந்தது. அதனை காவல் நிலையத்திற்கு எடுத்து சென்று ஒப்படைத்தோம். ஆஜர் எதிரிகளிடம் இருந்து தான் புகையிலை பொருட்கள் அடங்கிய மூட்டையை கைப்பற்றினோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. மேற்படி 4 சக்கர வாகனமான டெம்போவை நாங்கள் பிடிக்க முயற்சி செய்யவில்லை. அது அதிவேகமாக சென்றுவிட்டது. எதிரிகளை சம்பவயிடத்தில் வைத்து காலை 08.30 மணிக்கு பிடித்து காலை 09.30 மணிக்கு கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் காவல் நிலையம் சென்றுவிட்டோம். சாட்சி தற்போது 08.45 மணிக்கு காவல் நிலையம் சென்றுவிட்டதாகவும் 08.45 மணியிலிருந்து 09.30 மணிவரை எதிரிகளை விசாரித்தார்கள். அதுப்பற்றி எனக்கு தெரியாது.

2. என்னென்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்றால் ஹான்ஸ், விமல் பாக்கு, புகையிலையுடன் கலக்கும் தூள் அடங்கிய புகையிலை பொருட்கள் கைப்பற்றப்பட்டது. எவ்வளவு என்று எனக்கு தெரியாது. புகையிலை பொருட்கள் தவிர வேறு எந்த பொருட்களும் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை.

3. 1ம் எதிரி சிவக்குமார் அடிக்கடி காவல் நிலையத்தில் வந்து வாடகைக்கு கார் ஓட்டுவார் என்றால் சரிதான். 1ம் எதிரி சிவக்குமார் வாடகை பாக்கியை கேட்டதால் ஒரு பொய்யான வழக்கு பதியப்பட்டுள்ளது என்றாலும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 04.16 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்**